**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 25/2017**

**Deposition of Witnesses for PW1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கென்னடி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 13.08.2025

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தர்மபுரி CID பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து 2019ல் பணி ஓய்வு பெற்றேன். தற்போது ஈரோடு டவுனில் குடியிருந்து வருகிறேன். நான் ராமநாதபுரம் மாவட்டம் Q பிரிவு குற்ற புலனாய்வு துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 25.04.2013ம் தேதி என்னுடன் உதவி ஆய்வாளர் சந்தனமாரி, SI கணேசமூர்த்தி, த.கா.கோவிந்தராஜ், பெரியசாமி, பார்ட்டி சகிதம் கடத்தல் மற்றும் அந்நிய நபர்கள் நடமாட்டம் குறித்து ராமேஸ்வரம் 3ம் சத்திரம் கடற்கரை பகுதியில் ரோந்து அலுவல் செய்தபோது 3ம் சத்திரம் அருகில் உள்ள பாறையடி தெற்கு கடற்கரை பகுதியில் இலங்கைக்கு போதை பொருள் கடத்துவதற்கு தயாராக 3 நபர்கள் காத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் ராமேஸ்வரம் விஏஓ ஜெயகாந்தன், உதவியாளர் முனியசாமி ஆகியோர்களை வரவழைத்து 07.00 மணிக்கு பாறையடி தெற்கு கடற்கரைக்கு கண்காணிக்க சென்றபோது எங்களை கண்டதும் சவுக்கு தோப்பில் 3 நபர்கள் ஓடினார்கள். அவர்களை விரட்டி பிடிக்க 2 நபர்கள் சவுக்கு தோப்பு காட்டிற்குள் ஓடி மறைந்துவிட்டார்கள். ஜான்சன் என்ற நபரை பிடித்து விசாரித்தோம். அப்போது அவர் தப்பி ஓடி நபர்கள் 1.செல்வக்குமார், 2. டென்சிங் என்ற டென்னி என

தெரியவந்தது. மேலும் ஜான்சனிடம் விசாரிக்க இலங்கைக்கு கடத்த இருந்த 25 கிலோ எடை உள்ள 6 கருப்பு பேக் பாலிதீன் பேக்கில் மொத்தம் 150 கி லோ கஞ்சா இலங்கைக்கு கடத்த இருப்பதாக கூறினார். பின்னர் அவர் எடுத்து ஆஜர் செய்த 6 கருப்பு நிற பேக்கிலிருந்த 150 கிலோ கஞ்சா, விஏஓ ஜெயகாந்தன், உதவியாளர் முனியசாமி முன்னிலையில் 08.00 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிடிப்பட்ட ஜான்சன் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருள் 150 கிலோ கஞ்சாவை தனுஷ்கோடி காவல் நிலையம் சென்று தனி அறிக்கை மற்றும் அத்தாட்சியுடன் மேல்நடவடிக்கைக்காக தனுஷ்கோடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். பிரிவு 57 படியான தனி அறிக்கை **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக கோவில் வட்ட காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தேன். விவரம் சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இல்லை.

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.

**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 25/2017**

**Deposition of Witnesses for PW2**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.சந்தனமாரி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 13.08.2025

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது மதுரை மாவட்டம் பேரையூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ராமநாதபுரம் மாவட்டம் Q பிரிவு குற்ற புலனாய்வு துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 25.04.2013ம் தேதி நான், ஆய்வாளர் கென்னடி தலைமையில் SI கணேச மூர்த்தி, த.கா.கோவிந்தராஜ், பெரியசாமி, பார்ட்டி சகிதம் கடத்தல் மற்றும் அந்நிய நபர்கள் நடமாட்டம் குறித்து ராமேஸ்வரம் 3ம் சத்திரம் கடற்கரை பகுதியில் ரோந்து அலுவல் செய்தபோது 3ம் சத்திரம் அருகில் உள்ள பாறையடி தெற்கு கடற்கரை பகுதியில் இலங்கைக்கு போதை பொருள் கடத்துவதற்கு தயாராக 3 நபர்கள் காத்திருப்பதாக ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் ராமேஸ்வரம் விஏஓ ஜெயகாந்தன், உதவியாளர் முனியசாமி ஆகியோர்களை ஆய்வாளர் வரவழைத்து 07.00 மணிக்கு பாறையடி தெற்கு கடற்கரைக்கு கண்காணிக்க சென்றபோது எங்களை கண்டதும் சவுக்கு தோப்பில் 3 நபர்கள் ஓடினார்கள். அவர்களை விரட்டி பிடிக்க 2 நபர்கள் சவுக்கு தோப்பு காட்டிற்குள் ஓடி மறைந்துவிட்டார்கள். ஜான்சன் என்ற நபரை பிடித்து விசாரித்தோம். அப்போது அவர் தப்பி ஓடி நபர்கள் 1.செல்வக்குமார், 2. டென்சிங் என்ற டென்னி என

தெரியவந்தது. மேலும் ஜான்சனிடம் விசாரிக்க இலங்கைக்கு கடத்த இருந்த 25 கிலோ எடை உள்ள 6 கருப்பு பேக் பாலிதீன் பேக்கில் மொத்தம் 150 கிலோ கஞ்சா இலங்கைக்கு கடத்த இருப்பதாக கூறினார். பின்னர் அவர் எடுத்து ஆஜர் செய்த 6 கருப்பு நிற பேக்கிலிருந்த 150 கிலோ கஞ்சா, விஏஓ ஜெயகாந்தன், உதவியாளர் முனியசாமி முன்னிலையில் 08.00 மணிக்கு அத்தாட்சியில் ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.1** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிடிப்பட்ட ஜான்சன் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருள் 150 கிலோ கஞ்சாவுடன் தனுஷ்கோடி காவல் நிலையம் சென்று தனி அறிக்கை மற்றும் அத்தாட்சியுடன் மேல்நடவடிக்கைக்காக தனுஷ்கோடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளரிடம் ஆய்வாளர் கென்னடி ஒப்படைக்க உதவியாக இருந்தோம். தனி அறிக்கை பெற்று, தனுஷ்கோடி கா.நி.கு.எண்.21/2013 சட்டப்பிரிவுகள் சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(C),25 NDPS Act- ன் படி வழக்கு பதிவு செய்து, ராமேஸ்வரம் கோவில் காவல் நிலைய வட்ட ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்தார். கோவில் வட்ட காவல் ஆய்வாளர் 19.00 மணிக்கு தனுஷ்கோடி காவல் நிலையம் வந்து எதிரி ஜான்சன்கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை விஏஓ, தலையாரி மற்றும் என் முன்னிலையில் பதிவு செய்தார். பின்பு 6 பேக்குகளில் இருந்த கஞ்சாவிலிருந்து மாதிரிக்காக தலா 50 கிராம் வீதம் 2 மாதிரிகள் என மொத்தம் 6 பேக்குகளில் 12 மாதிரிகள் கோவில் காவல் ஆய்வாளர் எடுத்து SHO சீல் வைத்தார்கள். மீதமுள்ள கஞ்சாவை அதே பேக்குகளில் இருந்ததை நூலால் கட்டி, SHO சீல் வைத்தார்கள்.
வழக்கு இது சம்பந்தமாக கோவில் வட்ட ஆய்வாளர் என்னை விசாரித்தேன். விவரம் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இல்லை.

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.